28th August 1961] [Sri V. Sankaran]

"லிமிடெட் ஓனர்" சர்ப்ளஸ் நிலத்தை எடுத்துக்கொள்கிருர்கள். நஷ்ட ஈட்டுத் தொகை அப்சல்யூட் ஓனருக்கு கொடுப்பது என்று இருக்கிறது. நிலத்தைப் பொறுத்த வரையில் "வெஸ்டட் இன்டர்ஸ்ட்" வந்து விடுகிறது. பத்து ஏக்கருக்குள் இருந்தால் நஷ்ட ஈட்டுத் தொகைதான் கிடைக்கும். அது ஓரளவு சரி, முன்னுல் இருந்த "லிமிடெட் ஓனருக்கு" வேண்டுமானுல் காம்பன்சேஷனும் அப்சல்யூட் ஓனருக்கு நிலத்தையும் கொடுப்பது தான் சரி.

மெயின்டனன்ஸ் ஹோல்டரைப் பொறுத்தவரையில் நஷ்ட ஈட்டு தொகை சர்ப்ளஸ் ஆக இருக்கும்படியான தொகை--போதா விட்டால் என்ன செய்வது என்பதை யோசிக்கவேண்டும். நஷ்ட ஈடு குறைந்த அளவுதான் போட்டிருக்கிருேம். 10, 12 பங்கு குறைவுதான். போதிய அளவு மெயின்டனன்ஸ் வரக்கூடிய அளவு இல்லாவிட்டால் என்ன செய்வது என்று பார்க்கவேண்டும். நஷ்ட ஈட்டுக்குக் குறைந்த இன்ட்ரஸ்ட் போடப்பட்டிருக்கிறது. பாண்டு சம்பந்தமாக 2½ சதவிகிதம் இன்ட்ரஸ்ட் என்று மத்திய சர்க்காரிலிருந்து ஒரு தாக்கீது வந்திருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாட்டிலுள்ள நிலைமையில் 2½, 5 சதவிகிதம் வைத்தாலும் கூட அது குறைவு. அப்படியிருக்கும் நிலைமையில் 2½ சதவிகிதத்துக்கு பாண்டு என்ருல் என்ன பண்ணுவது? இது சங்கடமான விஷயம். இதிலே 2½ சதவிகிதம் என்று இருக்கும் வட்டி மிகவும் குறைவாக இருக்கும். இதையும் கவனிக்க வேண்டும். அதோடு தவறுகளைத் திருத்துவதற்காக விதிகளும், அதை அவர்களே செய்து கொள்ளலாம் என்று இருக்கிறது. மேலும் நோட்டீஸ் கொடுத்துத்தான் இந்த டெஸ்பாரிட்டியை ரெடிஃபை பண்ண வேண்டுமென்று சொல்கிறேன். இதனுல் இடைக் குத்தகைதாரர்கள்தான் பாதிக்கப்படுவார்கள். இதையும் கவனிக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

II. ANNOUNCEMENTS—*cont.*

(3) BUSINESS OF THE HOUSE.

DEPUTY SPEAKER: I have to announce that the Business Advisory Committee at its meeting to-day, decided on the following programme of business;

August, 29th / August, 30th ..	General discussion on the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Bill, 1960.
August, 31st ..	1. The Madras Appropriation (No. 5) Bill, 1961.
	2. The Madras Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Bill, 1961.
	3. The Madras Panchayats (Extension to Transferred Territory) and Panchayat Union Council (Special Provisions for First Constitution) Amendment Bill, 1961.
	4. The Madras District Development Councils and Panchayats (Extension to Added Territory) Bill, 1961.

[Deputy Speaker] [28th August 1961

5. The Madras (Added Territory) Extension of Laws (No. 2) Bill, 1961.
6. The Madras General Sales Tax (Third Amendment) Bill, 1961.
7. The Madras Local Authorities Finance Bill, 1961.

The House will adjourn on the 31st August 1961.

September, 18th	Discussion on the Flood situation in Cauvery—Non-Official Day.
September, 19th September, 20th	Clause-by-clause consideration of the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Bill, 1960.
September, 21st September, 22nd	Discussion on the Third Five Year-Plan.
September, 23rd September, 25th	Clause-by-clause consideration of the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Bill, 1960.
September, 26th	Discussion on National Integration.
September, 27th September, 28th September, 29th September, 30th	1. Further consideration of the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Bill, 1960. 2. Other Government Bills.

III. GOVERNMENT BILLS—*cont.*

(3) MADRAS LAND REFORMS (FIXATION OF CEILING ON LAND) BILL, 1960 (L.A. BILL NO. 8 OF 1960) AS AMENDED BY THE JOINT SELECT COMMITTEE (DISCUSSION)

* **SRI G. NARAYANASWAMI NAIDU**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தச் சட்டத்திற்காக நாம் வெகு நாட்களாகக் காத்து இருந்தோம். கர்ப்பம் என்று நினைத்தோம். அது மகோதரமாக ஆகிவிட்டது. வயிற்றிலே பிரசவ வேதனை இருந்தது. பிரசவம்தான் ஆனது—குழந்தை ஆணா பெண்ணா என்று கண்டுபிடிக்க முடியாத ஓர் நிலைமைதான் இன்று இருக்கிறது. சட்டத்தில் ஒரு நோக்கம் நிறைவேறியிருக்கிறதென்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஏற்கனவே ஐந்து வேலி, ஆறு வேலி நிலம் வைத்துக்கொண்டிருந்தவர்கள் நெல் விலை கூடுதலாக இருக்கிறது என்ற காரணத்தினால் மேற்கொண்டு கையில் இருக்கும் பணத்திற்கு நிலமாக வாங்கிப் போடலாம் என்ற ஆசையிலே தட்டுத்தடுமாறி விழ அதன்காரணமாக நில விலை ஏறி அந்த அந்த ஊர்களிலேயே இருக்கிற உழவர்களினால் நிலம் வாங்க முடியாத ஒரு நிலை இருந்ததே அதுதான் இந்தச் சட்டத்தினால் நீக்கப்பட்டிருக்கிறது. அது பெருமைப்படத்தக்க ஒரு விஷயம்தான். ஆனால் பல்லாண்டு காலமாக உழுது உழைக்கத் தெரிந்தவர்களுக்கு நிலம் இல்லாமல், நிலம் இருக்கிறவர்களுக்கு அடிமைப்பட்டு வாழ்விழந்து நின்றவர்களுக்கு அவர்களிடத்தில் உள்ள நிலத்தில் என்றென்றும் சுதந்திரமாக உழுது பயிரிட அவர்களுக்கு உரிமை இருக்கிறது என்பது மாத்திரம் அல்ல, இந்த நாட்டில் தனக்கும் சொத்து உரிமை இருக்கிறது, உழத் தெரிந்தவர்களுக்கோ நிலம் என்கிற எண்ணத்தை அவர்களுடைய உள்ளத்தில் ஊட்டி உற்பத்தியை அதிகமாகப் பெருக்க வேண்டுமென்பது நமது அடிப்படையான